பிள்ளைகள் ஒன்றுக்கு மேற்பட்ட மொழிகளைப் பேசும் போது

best start
meilleur départ
by/par health nexus santé

இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட மொழிகளைக் கற்கப் போகும் பிள்ளையின் பெற்றோராகிய உங்களுக்கு கேள்விகள் இருக்கலாம். உங்களுக்கு உதவிசெய்வதற்காக, ஆய்வின் அடிப்படையிலான தகவல்களை இந்த வழிகாட்டி உங்களுக்கு வழங்கும்.

பாடசாலையிலும் வாழ்க்கையிலும் உங்களுடைய பிள்ளை சிறந்து விளங்குவதற்கு மொழி சிறந்ததொரு கருவியாக இருக்கின்றது.

பெரும்பாலான பிள்ளைகள் ஒன்றுக்கு மேற்பட்ட மொழிகளைக் கற்கின்றார்கள். சிலர் இரண்டுக்கும் அதிகமாகக்கூட கற்கின்றார்கள். ஏதாவது ஒரு மொழியில் சிறப்பான மொழித் திறன்கள் உள்ள பிள்ளைகளில், அனேகமாக பின்வருவன இருப்பதை ஆய்வுக்கற்கைகள் காட்டுகின்றன:



- தங்களுடைய மூளையைச் சிறப்பாக வளர்க்கும்தன்மை
- தங்களுடைய பெற்றோர்களுடன் இறுக்கமான பிணைப்பு
- சிறப்பான தொடர்பாடல் திறன்கள்
- பாடசாலைக்கு மிகவும் தயாரான நிலையில் இருத்தல்.

எந்த வயதிலும் இரண்டு மொழிகளைக் கற்கலாம்

உலகம் முழுவதிலும் உள்ள குழந்தைகள், வெற்றிகரமாக இரண்டு மொழிகளில் பேசுவதற்குக் கற்கின்றார்கள். இரண்டாவது மொழி ஒன்றை எந்த வயதிலும்(பிறந்த போது அல்லது பின்னர்) எந்தச் சூழலிலும் (வீட்டில், பிள்ளைப்பராமரிப்பு நிலையத்தில், பாடசாலையில், சமூகத்தில்) கற்கலாம்.

ஒரு மொழியைக் கற்கும் பிள்ளைகளைப் போலவே, இரண்டு மொழிகள் பேசும் குழந்தைகளும் பிள்ளைகளும் மொழியில் மைல்கற்களை அதே வயதில் அடைவார்கள். ஆனால் ஒரு மொழியை மட்டும் கற்கும் பிள்ளையைப் போல, அதேயளவு திறன்களை இரண்டு மொழிகளிலும் உங்களுடைய பிள்ளை உடனடியாகப் பெற்றுக்கொள்வார் என எதிர்பார்க்காதீர்கள். இரண்டு மொழிகளிலும் தேர்ச்சியுள்ளவராக வருவதற்குக் காலம் எடுக்கும்!

இரண்டு மொழிகளைக் கற்றுக்கொள்வதற்கான சிறந்த காலம், 7 வயது என ஆய்வுக்கற்கைகள் காட்டுகின்றன. பிறப்பிலிருந்தே இரண்டு மொழிகளையும் கற்றுக்கொள்வது பிள்ளைகளுக்குச் சுலபமானதாக இருக்கும். கர்ப்பகாலத்தின் போது கூட, நீங்கள் இரண்டு மொழிகளிலும் பிள்ளைகளுடன் பேசலாம். பெற்றோர்கள் இரண்டு மொழிகளைப் பேசும் போது, அவர்களுடைய பிறந்திராத குழந்தை பல்வேறு ஒலிகளைக் கேட்கிறது. இரண்டு மொழிகளைக் கற்றுக் கொள்வதற்கு அவருடைய மூளையை அது தயார் செய்கின்றது.

ஒவ்வொரு மொழியையும் சரளமாகவும் சிறப்பாகவும் பேசக்கூடியவர்களிடமிருந்து அவற்றைப் பிள்ளைகள் நன்கு கற்றுக்கொள்கின்றார்கள்.

மொழியை அடிக்கடி பிள்ளைகள் கேட்கும் போதும், மொழியை அவர்கள் அடிக்கடி பயிற்சி செய்யும் போதும் மொழியை அவர்கள் கற்கின்றார்கள்.

இரண்டு மொழிகளைப் பிள்ளைகள் கற்கும் விதம்

இரண்டு மொழிகளைக் கற்பதற்கு நேரமும் பயிற்சி செய்வதற்குப் பல சந்தர்ப்பங்களும் தேவை. உங்களுடைய பிள்ளை இரண்டு மொழிகளை அல்லது மூன்றாவது மொழி ஒன்றைக் கற்றால், ஒவ்வொரு மொழியையும் மற்றவர்கள் பயன்படுத்துவதை உங்களுடைய பிள்ளை அடிக்கடி கேட்க வேண்டும். ஒவ்வொரு மொழியிலும் கதைப்பதற்கும் உங்களுடைய பிள்ளை பயிற்சி செய்ய வேண்டும்.

பெரியவர்கள் கதைப்பதைக் கேட்பது மட்டும் மொழிகளைக் கற்பதற்குப் போதாது. திரைகளின் (தொலைக்காட்சி, மின்கணினி மற்றும் மின்னியல் விளையாட்டுக்கள்) முன்பாக இளம் பிள்ளைகளை விடுவது நல்லதல்ல. நாளாந்தச் செயற்பாடுகளில், பிள்ளைகளில் அக்கறையுள்ளவர்களுடன் வேடிக்கையாக இருக்கும் (உ+ம். உடுப்புப் போடும் போது, விளையாடும் போது, பூங்காவுக்குச் செல்லும் போது) அதேவேளையில், பிள்ளைகள் மொழிகளைப் பயன்படுத்த வேண்டும்.

உங்களுக்கு இயல்பாக வரும் மொழியில் உங்களுடைய பிள்ளையுடன் கதையுங்கள். உங்களுடைய பிள்ளையின் மிகச் சிறந்த ஆசிரியர் நீங்கள் என்பதை நினைவில் வைத்திருங்கள். உங்களுடைய முதல் மொழியை அடிக்கடியும், மகிழ்வாக இருக்கும் போதும் நீங்கள் பயன்படுத்தினால் உங்களுடைய பிள்ளையும் அதைப் பயன்படுத்த விரும்புவார்.

உங்களுடைய குடும்பத்துக்குச் சரியானது என நீங்கள் உணரும் தெரிவைத் தெரிவுசெய்யவும்

1. ஒரு பெற்றோர்-ஒரு மொழி: பிள்ளையுடன் ஒரு மொழியில் ஒரு பெற்றோர் கதைத்தல்; மற்றப் பெற்றோர் பிள்ளையுடன் மற்ற மொழியில் கதைத்தல்.

2. ஒரு இடம் - ஒரு மொழி: வீட்டில் ஒரு மொழி; மற்றதை பிள்ளைப்பராமரிப்பகத்தில் அல்லது பாடசாலையில் கதைத்தல்.

3. ஒரு செயற்பாடு - ஒரு மொழி:

a. இரு பெற்றோரும் பகலில் ஒரு மொழியிலும் இரவில் மற்ற மொழியிலும் கதைத்தல்

b. பெரும்பான்மையான நேரங்களில் வீட்டில் ஒரு மொழியைப் பயன்படுத்தல், மற்றதைச் சமூகத்தில் குறுகிய நேரச் செயற்பாட்டின் போது பேசுதல் (உ+ம். வாரத்துக்கு ஒரு முறை நூலகத்தில் ஆங்கிலக் கதை நேரம்).

உங்களுடைய பிள்ளை இரண்டாவது மொழி ஒன்றைக் கற்பதற்கு உதவும் காரணிகள்

- நேர்மறையான அனுபவம்
- கற்கும் முறை
- ஆளுமை
- மற்ற மொழியைப் பற்றிய மனப்பாங்கு
- கற்பதற்கான உந்துகை
- பெரியவர்கள் பயன்படுத்தும் மொழித் தரம்
- ஒவ்வொரு மொழியையும் கேட்கும் மற்றும் கதைக்கும் நேரத்தின் அளவு

இரண்டு மொழிகளைப் பிள்ளைகள் கற்கும் வழிகள்

இரண்டு மொழிகளையும் ஒரே நேரத்தில் பிறந்ததிலிருந்து கற்றல் (ஒரே நேரத்திலான கற்றல்):
சில பிள்ளைகள் 3 வயதுக்கு முன்பாக இரண்டு மொழிகளைக் கற்கின்றனர்.

“என்னுடைய 18 மாத மகள், மரியா, பிறந்ததிலிருந்து ஸ்பானிஷ் மற்றும் பிரெஞ்சைக் கற்கின்றார். நான் அவளுடன் ஸ்பானிஷ் கதைக்கின்றேன், அவளுடைய தந்தை அவளுடன் பிரெஞ் கதைக்கின்றார்.

மரியா, 18 மாதத்தில் 30 சொற்கள் கதைக்கின்றார்: 15 ஸ்பானிஷ் சொற்கள், 15 வேறுபட்ட பிரெஞ் சொற்கள். இதன் கருத்து அவர் மொழியை நன்கு பயன்படுத்துகின்றார் என்பதாகும். சில வேளைகளில் இரண்டு மொழிகளிலும் பிழை விடுவார், ஆனால் ஒரே நேரத்தில் இரண்டு மொழிகளைக் கற்கும்போது இது பொதுவானது, அத்துடன் எதிர்பார்க்கப்படுவது.

அவள் இரண்டு மொழிகள் பேசுவது, எங்களுக்கு மிகவும் சந்தோஷமானதாக இருக்கின்றது. ஸ்பானிஷ் மற்றும் பிரெஞ் பேசக்கூடியதாக இருப்பது எங்களுக்கு முக்கியமானதாக உள்ளது. பிரதானமாக ஸ்பானிஷ் பேசும் அவளுடைய பேரர்களுடன் அவள் பிணைப்பை ஏற்படுத்த இது உதவும் என்பது எனக்குத் தெரியும். அவள் ஸ்பானிஷ் மற்றும் பிரெஞ் நண்பர்களுடன் விளையாட முடியும் என்பதும் அவளுக்கு மகிழ்ச்சியான விடயமாக உள்ளது.”

முதல் மொழி ஒன்றைக் கற்ற பின்னர் இரண்டாவது மொழி ஒன்றைக் கற்றல் (வரிசைமுறையிலான கற்றல்):

சில பிள்ளைகள் ஒரு நேரத்தில் ஒரு மொழியைக் கற்கின்றார்கள். இரண்டாவது மொழி பொதுவாக 3 வயதின் பின்னர் கற்கப்படுகின்றது. பொதுவாக, இரண்டாவது மொழி பிள்ளைப் பராமரிப்பகத்தில், பாடசாலையில் அல்லது குடும்ப அங்கத்தவர் மூலமாகக் கற்கப்படுகின்றது.

"என்னுடைய மகன் Chenக்கு 3 வயது. பிறந்ததிலிருந்து வீட்டில் அவனுடன் நாங்கள் மன்டரினில் கதைத்தோம். ஐந்து மாதங்களுக்கு முன்னர், அவன் பிள்ளைப்பராமரிப்பகத்துக்குச் செல்லத் துவங்கியுள்ளான். அங்கு அவன் ஆங்கிலத்தை ஒரு இரண்டாம் மொழியாகக் கற்கின்றான்.

முதலில், பிள்ளைப்பராமரிப்பகத்தில் Chen மன்டரின் சொற்களைப் பயன்படுத்தினான். ஆனால் அங்குள்ள ஆசிரியர்கள் எவரும் மன்டரின் கதைப்பதில்லை. எனவே அவன் அதைப் பிள்ளைப்பராமரிப்பகத்தில் பயன்படுத்துவதை நிறுத்தினான். அத்துடன் 4 மாதங்களாக அங்கு அமைதியாக இருந்தான். வீட்டில், எந்த நேரமும் அவன் கதைத்தான்.

அந்த ஆசிரியர்கள் கவலைப்படவில்லை ஏனெனில் அவன் ஆங்கிலத்தை எப்படிப் பாவிப்பது எனக் கண்டுபிடிப்பதற்கு முயற்சிக்கின்றான் என்பது அவர்களுக்குத் தெரிந்திருந்தது. இரண்டாம் மொழியைக் கற்கும் அனேகமான பிள்ளைகள் 6 மாதங்கள் வரை நீடிக்கக்கூடிய அமைதியான காலம் ஒன்றுக்கூடாகச் செல்கின்றார்கள். எங்களுடன் கதைத்த பின்னர் Chen மண்டரினில் பல சொற்களைப் பயன்படுத்துவதும் 4 தொடக்கம் 6 சொற்கள் உள்ள வசனங்களில் கதைப்பதும் அவர்களுக்கும் தெரிந்திருந்தது.

பின்னர், "Hi, Bye, cow, cat, blue, eat, thirsty" போன்ற சொற்களையும் சிறிய வசனங்களையும் (உ+ம். "don't know", "what's that?") அவன் பயன்படுத்த ஆரம்பிப்பதை அவனுடைய ஆசிரியர் அவதானித்தார். ஆங்கிலம் கற்பதற்கு கொஞ்சக் காலம் எடுக்கும் என்பதும் அவன் பிழைகள் விடுவான் என்பதும் எங்கள் எல்லோருக்கும் தெரியும். ஆனால் மிகக் குறுகிய காலத்தில் அவனால் இரு மொழிகளையும் நன்கு பயன்படுத்த முடியும் என்பது எங்களுக்குத் தெரியும்."

ஒவ்வொரு குடும்பத்தினரும், அவர்களுடைய குடும்ப வாழ்க்கை, அவர்களுடைய சூழ்நிலை, அவர்களுடைய நம்பிக்கைகள், அவர்களுடைய கலாசாரம், ஒவ்வொரு மொழியிலுமான அவர்களின் திறன்கள் என்பனவற்றின் அடிப்படையில் சிறந்த தீர்மானத்தை எடுக்க வேண்டும். தீர்மானத்தை நீங்கள் எடுத்த பின்னர், அந்தத் தீர்மானத்தின்படி நடவுங்கள். அது தான் உங்களுடைய குடும்பத்துக்குச் சிறந்ததாகும்.!

இரண்டு மொழிகளை ஒரு பிள்ளை கற்கும் போது எதை எதிர்பார்ப்பது

வீட்டில், இரண்டு மொழிகளைக் கற்பது இளம் பிள்ளைகளுக்கு குழப்பத்தையோ அல்லது மொழிப் பிரச்சினையையோ கொடுக்க மாட்டாது. ஆனால், பிள்ளைகள் அவற்றில் சிறந்து இருப்பதற்கு, அவர்கள் ஒவ்வொரு மொழியையும் அடிக்கடி கேட்பதுடன் பேசியும் பழகவும் வேண்டும் என்பதை நினைவில் வைத்திருங்கள். குறித்த மொழியைச் சிறப்பாகப் பேசக்கூடியவர்களிடமிருந்து பிள்ளைகள் அந்த மொழியைச் சிறப்பாகக் கற்கின்றார்க்கள். ஆங்கிலத்தை அல்லது பிரெஞ்சை பெற்றோரால் சரளமாகப் பேச முடியாவிட்டால், அவர்கள் தங்களுடைய முதல் மொழியை/மொழிகளைப் பயன்படுத்த வேண்டும். இரண்டு மொழிகளைப் பிழையாகக் கேட்பதை அல்லது கற்பதை விட ஒரு மொழியைக் கற்றல் சிறப்பானது. முதல் மொழி ஒன்றைச் சிறப்பாக அறிந்திருப்பதன் மூலம், பிள்ளைப்பராமரிப்பகம், பாடசாலை, ஏனைய சமூகத் திட்டங்கள் போன்ற பிள்ளைகளின் வீட்டுக்கு வெளியிலுள்ள சூழலில் அவர்கள் இரண்டாவது மொழி ஒன்றை மிகவும் சுலபமாகக் கற்கலாம்.

மொழி கற்றலில் தாமதம் இருக்கும் பிள்ளைகளும் இரண்டு மொழிகளைக் கற்கலாம் என ஆய்வுக்கற்கைகள் காட்டுகின்றன. இரண்டு மொழிகளை அவர்கள் கேட்பதால் அல்லது கற்பதால் அவர்கள் மேலும் தாமதிக்கப்படுவதில்லை. இருந்தாலும், அவர்களுக்கு பேச்சு மற்றும் மொழிச் சிரமங்கள் இரண்டு மொழிகளிலும் இருக்கும். மொழி கற்றலில் உங்களுடைய பிள்ளைக்குத் தாமதம் இருந்தாலும் கூட, இரண்டு மொழிகளையும் தொடர்ந்து பயன்படுத்துங்கள். உங்களுடைய பிள்ளைக்கு ஒரு மொழி என நீங்கள் மட்டுப்படுத்தினால், அது ஏனைய குடும்ப அங்கத்தவர்களுடன் அல்லது சமூகத்திலுள்ளவர்களுடன் உங்களுடைய பிள்ளை கதைக்கும், விளையாடும் மற்றும் அவர்களை அறிந்து கொள்ளும்சந்தர்ப்பங்களைக் குறைக்கலாம்.

இரண்டாம் மொழி ஒன்றைக் கற்கும் பிள்ளைகள் யாவருக்கும் பின்வருவன பொதுவானவையாக உள்ளன:

- **ஒரு மொழியை மற்றதை விட அதிகமாகப் பயன்படுத்தல்.** குறித்த மொழியை உங்களுடைய பிள்ளை அதிகமாகக் கேட்கும் போதும், பேசும் போதும் இது நிகழ்கின்றது. நீங்களும் உங்களுடைய துணைவரும் இரண்டு வேறுபட்ட மொழிகளைப் பேசினால், முக்கியமாக ஒரு மொழி வீட்டுக்கு வெளியே மிகவும் குறைவாகப் பேசப்படும் போது, இரண்டு மொழிகளிலும் உங்களுடைய பிள்ளை போதுமான பயிற்சியைப் பெறுவதற்கு, “ஒரு பெற்றோர்—ஒரு மொழி” அணுகுமுறை உதவி செய்யலாம். குடும்பத்தவர்களுடனும் நண்பர்களுடனும் எந்த மொழியைப் பயன்படுத்துவது எனத் தீர்மானியுங்கள்.
- **ஒரு வசனத்தில் இரண்டு மொழிச் சொற்களையும் கலத்தல்.** ஒன்றுக்கு மேற்பட்ட மொழிகளைப் பயன்படுத்தும் குடும்பங்களில், சில வேளைகளில் பெரியவர்களும் பிள்ளைகளும் மொழிகளை மாறி மாறிப்[பேசுவார்கள். மொழிகளை நீங்கள் மாறி மாறிப் பேசினால், “ஒரு மொழி-ஒரு செயற்பாடு” அணுகுமுறை உதவி செய்யலாம். உங்களுடைய பிள்ளை இரண்டு மொழிகளைக் கலந்து பேசுவதை நீங்கள் கேட்கும் போது, பயன்படுத்துவதற்குச் சரியான சொல்லை உங்களுடைய பிள்ளைக்குக் கொடுங்கள். இரண்டு மொழிகளையும் மாறி மாறிப் பேசுதல் தாமதத்தை ஏற்படுத்த மாட்டாது.
- **விதிமுறைகள் அனைத்தையும் அவர்கள் அறியும் வரை புதிய மொழியில் பிழைகள் விடல்.** உங்களுடைய பிள்ளை பிழைகள் விடும் போது (அது நடக்கும்), சரியான சொற்களில் அல்லது நல்ல வசனத்தில் அதைத் திருப்பிச் சொல்லுங்கள்.
- **முதல் மொழியை இழத்தல்.** புதிய மொழியைப் பயன்படுத்துவதில் பிள்ளைகள் தேர்ச்சியடையும் போது, தங்களுடைய முதல் மொழியைப் பயன்படுத்துவதை அவர்கள் நிறுத்த விரும்பலாம். பிள்ளைப்பராமரிப்பகத்துக்கு அல்லது பாடசாலைக்கு உங்களுடைய பிள்ளை செல்ல ஆரம்பித்திருந்தாலும் கூட, வீட்டில் உங்களுடைய பிள்ளையுடன் உங்களுடைய முதல் மொழியில் தொடர்ந்து கதையுங்கள். குடும்ப வாழ்க்கை, பாரம்பரியங்கள் மற்றும் கலாசாரத்தின் ஒரு முக்கியமான பகுதியாக மொழி இருக்கின்றது. பிள்ளை ஒருவர் தனது முதல் மொழியை இழந்தால், அடையாளம் பற்றிய அவருடைய உணர்வில் அது ஒரு பாதிப்பை ஏற்படுத்தலாம். உங்களுடைய குடும்பத்தவருடனும் உங்களுடைய சமூகத்தவருடனும் செயற்பாடுகளை உங்களுடைய தாய்மொழியில் திட்டமிடுங்கள். உங்களுடைய முதல் மொழியைப் பயன்படுத்தும் உங்களுடைய பிள்ளையின் முயற்சிகளுக்கு, ஒரு “high-five”, ஒரு அணைப்பு அல்லது ‘நீங்கள் கன்ரனீஸ் பேசுவதைக் கேட்பது எனக்கு மிகவும் பிடித்திருக்கின்றது” போன்ற கருத்துரையால் சன்மானம் அளியுங்கள்.

இரண்டு மொழிகளைக் கற்பதற்கு நேரமும் பயிற்சியும் தேவை என்பதை ஞாபகத்தில் வைத்திருங்கள். வீட்டில் உங்களுடைய முதல் மொழியை/மொழிகளைத் தொடர்ந்து பயன்படுத்துங்கள். உங்களுடைய பிள்ளையின் ஆர்வங்கள் பற்றிக் கதையுங்கள். உங்களுடைய பிள்ளையின் முதல் மொழியை விருத்தி செய்யவும், அதைத் தக்க வைத்திருக்கவும் உதவுவதற்காக, வாசியுங்கள், விளையாடுங்கள் அத்துடன் பாடுங்கள்.

படம் எடுத்தவர்: Simon Blackley (CC)

இரண்டு மொழிகளைக் கற்பதன் நன்மைகள்

இரண்டு மொழிகளைக் கற்றல் என்பது மனதுக்குத் திறம்பட வேலை கொடுப்பதைப் போன்றது; அது மூளையின் திறனைக் கூட்டுகிறது. இரண்டு மொழிகள் பேசுபவராக இருப்பது, முக்கியமாக மொழி, நினைவாற்றல் மற்றும் கவனம்செலுத்தல் பகுதிகளில், மூளையை வலுவாக்குவதை ஆய்வுக்கற்கைகள் காட்டுகின்றன.

இரண்டு மொழிகளைக் கற்கும் பிள்ளைகள்:

- ✦ சிறந்த மொழி & கேட்டல் திறன்களைக் கொண்டிருக்கின்றார்கள்.
- ✦ வாசிப்பு மற்றும் எழுத்தில் சிறந்து விளங்குகின்றார்கள்.
- ✦ மிகுந்த ஆக்கத்திறன் உடையவர்களாக இருக்கின்றார்கள்.
- ✦ பல்வேறு வேலைகளை ஒரே நேரத்தில் செய்யும் திறன்களில் சிறந்தவர்களாக இருக்கின்றார்கள்.
- ✦ கூர்மையான நினைவாற்றலைக் கொண்டிருக்கின்றார்கள்.
- ✦ பிரச்சினைகளைத் தீர்ப்பதில் சிறந்தவர்களாக இருக்கின்றார்கள்.
- ✦ அதிகளவு நண்பர்களை உருவாக்கும் சந்தர்ப்பமுள்ளவர்களாக இருக்கின்றார்கள்.
- ✦ பிற்காலத்தில் சிறந்த தொழில்களைக் பெற்றுக்கொள்கின்றார்கள்.

உத்திகள்

உங்களுடைய முதல் மொழியில் உங்களுடைய பிள்ளையுடன் கதையுங்கள்

- உங்களுடைய முதல் மொழியில் உங்களுடைய பிள்ளையுடன் கதைப்பது, சிறந்த மொழி மாதிரியை உங்களுடைய பிள்ளைக்கு வழங்குகின்றது. கருத்துக்களைச் சிறப்பாக உங்களால் விளங்கப்படுத்த முடியும். மேலும் சிக்கலான வார்த்தைகளைப் பயன்படுத்த முடியும், நகைச்சுவைகளைப் பங்குபோட முடியும், கேள்விகளைக் கேட்க முடியும், அத்துடன் உங்களுடைய முதல் மொழியில் உங்களால் மிகவும் இயல்பாக இருக்க முடியும்.
- உங்களுடைய பிள்ளை, பிள்ளைப்பராமரிப்பகத்துக்கோ அல்லது பாடசாலைக்கோ செல்ல ஆரம்பித்திருப்பதுடன் அவர் வேறு மொழியில் பதிலளித்தாலும் கூட, உங்களுடைய முதல் மொழியில் தொடர்ந்து கதையுங்கள்.
- உங்களுடைய பிள்ளை, பிள்ளைப்பராமரிப்பகத்துக்கோ அல்லது பாடசாலைக்கோ செல்ல ஆரம்பிக்கும் போது, தேவைகள் அல்லது உணர்ச்சிகள் (உ+ம். "தண்ணீர்", "வலி", "மலசலம் கழிக்குமிடம்"). பற்றிக் கதைப்பதற்கு உங்களுடைய பிள்ளை பயன்படுத்தும் உங்களுடைய முதல் மொழிச் சொற்களை அந்த ஆசிரியருடன் பங்கிட்டுக் கொள்ளுங்கள். உங்களுடைய பிள்ளையை அந்த ஆசிரியர் விளங்கிக்கொள்வதற்கு இது உதவிசெய்யும்.
- உங்களுடைய பிள்ளையுடன் உங்களுடைய குடும்பம், உங்களுடைய கலாசாரம் பற்றிக் கதையுங்கள். அண்மையில் அல்லது கடந்தகாலத்தில் நடந்த குடும்ப நிகழ்வுகள் மற்றும் பாரம்பரிய இசை, ஆடைகள் அல்லது உணவு பற்றிக் கதையுங்கள்.

உங்களுடைய முதல் மொழியில் புத்தகங்களை வாசியுங்கள்

- அடிக்கடி புத்தகங்கள் வாசியுங்கள். அவற்றை உங்களுடைய முதல் மொழியில் வாசியுங்கள்.
- பிள்ளையாக இருக்கும் போது, உங்களுடைய முதல் மொழியில் நீங்கள் படித்த கதைகளைக் கூறுங்கள். கேட்டல், சிந்தித்தல், மொழி மற்றும் வாசித்தல் திறன்களைப் பிள்ளைகள் விருத்திசெய்வதற்கு புத்தகங்களும் கதை சொல்லலும் உதவிசெய்யும்.
- புத்தகத்திலுள்ள படங்களைப் பற்றிக் கதையுங்கள். இந்த படங்களைப் பற்றி முறை எடுத்துக் கதையுங்கள். உங்களுடைய முதல் மொழியிலுள்ள புதிய சொற்களை உங்களுடைய பிள்ளை கற்பார்.
- வீட்டைச் சுற்றியுள்ள பொருள்களைத் தொடர்ந்து வாசியுங்கள் (நகைச்சுவைப் புத்தகங்கள், சஞ்சிகைகள், cereal பெட்டிகள்).
- நூலக அட்டை ஒன்றைப் பெற்றுக்கொள்வதுடன் அடிக்கடி நூலகத்துக்குச் செல்லுங்கள். வேறுபட்ட மொழிகளில் புத்தகங்கள் கிடைக்கின்றன.

உங்களுடைய பிள்ளையுடன் உங்களுடைய முதல் மொழியில் விளையாடுங்கள் அத்துடன் பாடுங்கள்

- உங்களுடைய பிள்ளை விளையாடும் போது, முறை எடுக்கவும் அறிவுறுத்தல்களைப் பின்பற்றவும் அவர் கற்பதுடன் விளையாடும் அதேவேளையில் தன்னுடைய முதல் மொழியிலுள்ள சொற்களையும் பாவிக்கின்றார்.
- மகிழ்வான விடயங்களில் தன்னுடைய முதல் மொழியைப் பயன்படுத்தும் மேலதிக சந்தர்ப்பங்களை உங்களுடைய பிள்ளைக்குக் கொடுப்பதற்காக சினேகிதர்களையும் குடும்பத்தவர்களையும் சந்தியுங்கள்.
- உங்களுடைய முதல் மொழியிலுள்ள பாரம்பரியப் பாட்டுக்களைப் பாடுங்கள். புதிய சொற்களை விளங்கப்படுத்துவதுடன் அந்தப் பாட்டுக்களின் கருத்தைப் பற்றியும் கதையுங்கள்.
- உங்களுடைய முதல் மொழியில் அல்லது இரண்டு மொழிகளிலும் பாடல்களைத் திரும்பவும் திரும்பவும் கேளுங்கள். திரும்பவும் திரும்பவும் செய்வதால் பிள்ளைகள் கற்கின்றார்கள் அத்துடன் திரும்பத் திரும்பச் செய்வது அவர்களுக்கு மிகவும் பிடிக்கும்.
- சமூக நிலையங்களில் அல்லது நூலகத்தில் உங்களுடைய முதல் மொழியில் செயற்பாடுகளை வழங்கும் பிள்ளைகளுக்கான செயல்முறைவகுப்புக்களைத் தேடுங்கள்.

ஆதாரவளங்கள்

Preschool Speech and Language Program (பாடசாலை செல்வதற்கு முன்பான பேச்சு மற்றும் மொழிச் செயல்முறை வகுப்புக்கள்): உங்களுடைய பிள்ளையின் தொடர்பாடல் திறன்கள் பற்றி நீங்கள் கவலைப்பட்டால், உங்களுடைய உள்ளூர் செயல்முறை வகுப்புக்களுடன் தொடர்புகொள்ளுங்கள்.
www.children.gov.on.ca/htdocs/English/topics/earlychildhood/speechlanguage/locations.aspx

Ministry of Children and Youth services (பிள்ளைகள் மற்றும் இளைஞர் சேவைகள் அமைச்சகம்): வேறுப்பட்ட மொழிகளின் மைல்கற்களையும், மொழியை உங்களுடைய பிள்ளை கற்பதற்கு உதவும் குறிப்புக்களையும் இந்த வலைத்தளம் தருகின்றது.
www.children.gov.on.ca/htdocs/English/topics/earlychildhood/speechlanguage/index.aspx

Nipissing District Developmental Screen (NDDS): கைக்குழந்தைகள் மற்றும் 6 வயதுக்குட்பட்ட பிள்ளைகளுக்கான வளர்ச்சியடைதல் சரிபார்ப்புப்பட்டியல்கள் மற்றும் செயற்பாடுகளுக்கான குறிப்புகள் இந்த வலைத்தளத்தில் கிடைக்கும். இந்தச் சரிபார்ப்புப்பட்டியல்கள் ஆங்கிலம், பிரெஞ், ஸ்பானிஷ், சீன மற்றும் வியட்நாம் மொழிகளில் கிடைக்கின்றன.
www.ndds.ca/ontario.html

Best Start Resource Centre: இந்த வலைத்தளம் பெற்றோருக்கு பல ஆதாரவளங்களை வழங்குகின்றது அத்துடன் அவற்றில் சில பல்வேறு மொழிகளில் உள்ளன.
www.beststart.org/resources/hlthy_chld_dev/index.html

- **Growing up in a new land (புது இடத்தில் வளர்தல்):** புதிதாக வந்த பெற்றோருக்கான ஒரு வழிகாட்டி. பார்க்கவும் பக்கங்கள்: 16-18.
- **Learning to Play and Playing to Learn(விளையாடுவதற்குக் கற்றலும் கற்பதற்காக விளையாடலும்):** குடும்பத்தவர்கள் செய்யக்கூடியவை. பாடசாலைக்குத் தயாராக இருத்தல் மற்றும் மொழி விருத்தி பற்றிய தகவல்களுக்கு, 14ம் பக்கத்தையும் அதற்கப்பாலும் பார்க்கவும்.

Bilingual monkeys: இரு மொழிகள் பேசும் பிள்ளைகளை வளர்ப்பதற்கான யோசனைகள் மற்றும் உத்வேகத்துக்கு (without going bananas (பரபரப்பில்லாமல்)).
www.bilingualmonkeys.com/my-materials/

Multilingual living: மிகவும் இளமையாக இருக்கும் போது, பிள்ளைகள் மொழி ஒன்றைக் கற்பதற்கு நீங்கள் உதவிசெய்யவேண்டியதன் அவசியத்துக்கான காரணங்கள் பற்றிக் கலந்துரையாடுகின்றது.
www.multilingualliving.com/

Fédération des parents francophones de Colombie-Britannique: சிறுபான்மைச் சூழலில் வாழும் பிள்ளைகளில் இரண்டு மொழிகளின் விருத்தி பற்றிப் பல்வேறுபட்ட ஆதாரவளங்கள் மற்றும் சான்றுகள்.
http://developpement-langagier.fpfcb.bc.ca/en

Ontario Early Years Centre: Early Years Centres. அமைவிடங்கள். உங்களுக்கு அருகிலுள்ள அமைவிடத்தைக் கண்டறிய.
www.oeyc.edu.gov.on.ca/locations/index.aspx

Ontario Public Health Units: பொதுச் சுகாதாரத் தாதி ஒருவரைத் தொடர்புகொள்ளவும் உங்களுடைய சமுகத்திலுள்ள செயற்பாடுகள் மற்றும் ஆதரவுகள் பற்றி மேலும் அறியவும்.
www.health.gov.on.ca/en/common/system/services/phu/locations.aspx

நன்றி

இந்த ஆதாரவளத்துக்கான ஆய்வுக்கும் இதை எழுதியதற்குமாக Roxane Bélanger, Speech Language Pathologistக்கு Best Start Resource Centre நன்றி கூறுகின்றது. இந்த ஆதாரவளத்தை உருவாக்கும் போது, கருத்துரைகளை வழங்கியவர்களுக்கும் நன்றி:

- Alka Burman, Early Literacy Specialist, Human Services, Peel Region
- Darlene O'Riordan, Speech-Language Pathologist
- Elizabeth Lightford, RECE, M.Ed.
- Laurie-Ann Staniforth, M.P.O, Reg CASLPO, Co-Clinical Coordinator, Speech Language Pathologist, First Words
- Valerie Rhomberg, Manager, Academic Programs, Mothercraft College

Best Start Resource Centre Lead: Marie Brisson

இந்தக் கையேட்டுக்கான கருத்துரைகள் வழங்கிய பெற்றோருக்கும் நிபுணர்களுக்கும் நாங்கள் நன்றி கூற விரும்புகின்றோம்.

best start
meilleur départ

by/par health nexus santé

www.beststart.org

ஒன்ராறியோ அரசாங்கம் வழங்கிய நிதியுதவியுடன் இந்த ஆவணம் தயாரிக்கப்பட்டுள்ளது. இதிலுள்ள தகவல்கள் எழுதியவர்களின் கருத்துக்களைப் பிரதிபலிக்கின்றன. இவை ஒன்ராறியோ அரசாங்கத்தின் கருத்துக்களாக இருக்க வேண்டிய அவசியமில்லை. இந்த வழிகாட்டி முழுவதும் மேற்கோள் காட்டப்பட்டிருக்கும் ஆதாரவளங்கள் மற்றும் திட்டங்கள் Best Start Resource Centre ஆல் அல்லது ஒன்ராறியோ அரசாங்க,த்தால் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும் என்ற அவசியம் இல்லை

2014